பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 05 புதன்கிழமை 19.03.2025 | அதிர்வு 228

### பாதுகாப்பு படைக் குறைப்பு எதிரான

## மஹிந்தவின் ரிட் மனு நிராகரிப்பு



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது பாதுகாப்பு அதிகாரிகளைக் குறைத்தமைக்கு எதிராகத் 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# வம்பிழுக்கும் அர்ச்சுனாவுக்கு நாடாளுமன்றில் வாய்ப்பூட்டு!

### அடுத்த 8 அமர்வு நாள்களில் அவரின் உரைகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்யத் தடை விதிப்பு

சுயேச்சைக் குழுவின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவினால் நாடாளுமன்றத்தில் அடுத்த 8 அமர்வு நாள்களில் முன்வைக்கப்படும் கருத்துக்கள் மற்றும் உரைகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்வதற்குச் சபாநாயகரினால் தடை விதிக்கப்பட்டுள்ளது.

“நாடாளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவின் சில உரைகள், கருத்துகள் தேசிய நல்லிணக்கத்துக்கும், இன சகவாழ்வுக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் உள்ளன. இதற்கு நான் கடும் அதிருப்தியை வெளிப்படுத்துகிறேன்.” – என்று சபாநாயகர் 02



# தேசமெங்கும் தேடிய தென்னக்கோன் மாத்தறை நீதிமன்றத்தில் சரணடைவு

## நாளை வரை விளக்கமறியலில்

மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் இன்று காலை சரணடைந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை நாளை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு மாத்தறை, வெலிகம பகுதியில் ஹோட்டல் ஒன்றின் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனை கைது செய்துநீதிமன்றத்தில் முற்படுத்துமாறு மாத்தறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. 02

## தேசபந்துவின் சொந்த வீட்டில் 1009 மதுபானப் போத்தல்கள்

### சோதனையின்போது சிக்கின

முன்னால பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் வீட்டில் இருந்து 1009 மதுபானப் போத்தல்கள் மீட்கப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால இந்தத் தகவலை வெளியிட்டார். 02

## யூடியூபர் கிருஷ்ணாவுக்கு விளக்கமறியல் நீடிப்பு!



யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்ட யூடியூப் சனலை நடத்தும் கிருஷ்ணாவை எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் தொடர்ந்து வைக்குமாறு மல்லாகம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேற்படி யூடியூபர் தான் 02





# யாழில் தமிழரசு, முன்னணி வேட்புமனு

**(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணம் மாவட்ட உள்ளூராட்சி சபைகளில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) என்பன இன்று மாலை தாக்கல் செய்தன.

தமிழரசுக் கட்சியின் சார்பில் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சார்பில் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் 17 சபைகளில் தமிழரசுக் கட்சி 5 சபைகளினதும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 9 சபைகளினதும் வேட்புமனுக்களை மாத்திரம் இன்று தாக்கல் செய்தன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### வம்பிழுக்கும்...

ஜகத் விக்ரமரத்ன சபையில் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று சபாநாயகர் அறிவிப்புவேளையின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா மார்ச் 20, 21, ஏப்ரல் 8, 9, 10, மே 6, 7 மற்றும் 8 ஆகிய திகதிகளில் நாடாளுமன்றத்தில் ஆற்றும் உரையை நேரடியாக ஒளிப்பரப்பு செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் நாடாளுமன்ற உரையை அவர் சமூக வலைத்தளங்களில் பதிவிடக் கூடாது எனவும் சபாநாயகர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரையில் பயன்படுத்தியுள்ள சர்ச்சைக்குரிய வார்த்தைகள் அனைத்தையும் ஹன்சாட் பதிவில் இருந்து நீக்குமாறும் சபாநாயகர் உத்தரவிட்டார்.

மேற்படி காலப்பகுதியில் அவர் ஆற்றும் உரையில் தெரிவிக்கும் விடயங்களை அடிப்படையாகக்கொண்டே தடை நீக்கம் பற்றி தீர்மானிக்கப்படும் என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

### தேசமெங்கும்...

இதனையடுத்து தேசபந்து தென்னக்கோன் தலைமறைவானார். அவரைக் கைது செய்வதற்குப் பல பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டு தேடுதல் வேட்டை இடம்பெற்று வந்தது.

இதற்கிடையில் தன்னைக் கைது செய்யுமாறு பிறப்பிக்கப்பட்ட உத்தரவை இரத்துச் செய்யுமாறு கோரி தேசபந்து தென்னக்கோன் சார்பில், அவரது சட்டத்தரணியால் ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே தேசபந்து தென்னக்கோன் இன்று காலை மாத்தறை நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்திருந்தார். குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் வரை அவர் நீதிமன்ற சிறைக் கூண்டில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

பின்னர் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையடுத்து தேசபந்து தென்னக்கோனை நாளை வியாழக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

### தேசபந்துவின்...

795 வெளிநாட்டு மதுபானப் போத்தல்களும், 214 வைன் போத்தல்களுமே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

தேசபந்து தென்னக்கோனின் வீட்டை சி.ஐ.டியினர் நேற்று சோதனைக்கு உட்படுத்தியபோது இரண்டு கைத்தொலைபேசிகளும் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

### யூடியூபர்...

உதவி செய்யும் காணொளிகளை வலையொளி பக்கத்தில் பதிவேற்றி வந்திருந்தார்.

இந்நிலையில், அவர் யாழ். பண்டத்தரிப்பில் உள்ள ஒரு வீட்டுக்கு இரவு வேளை சென்று அநாகரிமாக நடந்து கொண்ட காணொளி ஒன்று வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.

இதையடுத்து அவர் அந்த வீட்டுக்கு மீண்டும் சென்றிருந்த வேளை இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு இளவாலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

விசாரணைகளை மேற்கொண்ட இளவாலைப் பொலிஸார் அவரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர்.

இந்நிலையில், அவரை இன்று வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டிருந்தார்.

கிருஷ்ணா தொடர்பான வழக்கு இன்று நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட வேளை எதிர்வரும் ஏப்ரல் 2ஆம் திகதி வரை அவரைத் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

### மஹிந்தவின்...

தாக்கல் செய்த அடிப்படை உரிமை மனுவை விசாரணையின்றி உயர் நீதிமன்றம் இன்று நிராகரித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்புக்காக வழங்கப்பட்டிருந்த அதிகாரிகளில் 60 பேரை அண்மையில் அரசு மீளப்பெற்றிருந்தது.

இந்நிலையில், இதற்கு எதிரான மனுவில் உள்ள விவரங்களை இன்று நீண்ட நேரம் ஆய்வு செய்த பின்னரே உயர் நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை வழங்கியுள்ளது.

# யாழில் பொலிஸார் மீது சந்தேகநபர் தாக்குதல்



யாழ். தெல்லிப்பழையில் கைது செய்யச் சென்ற பொலிஸார் மீது சந்தேகநபர் ஒருவர் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

சந்தேகநபரைக் கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. நீதிமன்றத்தின் கட்டளையை நிறைவேற்றுவதற்காக தெல்லிப்பழை பொலிஸார் மேற்படி சந்தேக நபரைக் கைது செய்வதற்குச் சென்றனர்.

இதன்போது, சந்தேகநபர் தகாத வார்த்தைப் பிரயோகங்களைப் பிரயோகித்து, பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியுள்ளார். பின்னர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார்.

தாக்குதலுக்குள்ளான பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சந்தேகநபரைத் தேடி தெல்லிப்பழை பொலிஸார் வலைவீசி வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ரணிலுக்கே பெருமை!

2024ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 5 சதவீதம் வளர்ச்சியடைந்துள்ளதாக தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டுக்கான தேசிய கணக்கு மதிப்பீடுகள் பற்றிய அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டில் 2.3 வீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி 2024ஆம் வருடத்தின் நான்காம் காலாண்டில் 5.4 சதவீதமாக நேர்மறை வளர்ச்சியைக் காண்பித்துள்ளது.

2024ஆம் ஆண்டின் இலங்கைக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தி நடப்புப் போக்கில் 2023ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட 27 லட்சத்து 42 ஆயிரம் கோடி ரூபாவிலிருந்து 29 லட்சத்து 90 ஆயிரம் கோடி ரூபாவாக அதிகரித்து 9 சதவீத நேர்மறை மாற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில் விவசாயத்துறையின் 8.3 சதவீத உயர்வும், கைத்தொழில்துறையின் 25.5 சதவீத உயர்வும், சேவைத்துறையின் 57.5 சதவீத உயர்வும் காத்திரமாகப் பங்களித்துள்ளன.

2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் வீழ்ச்சியுற்ற மொத்த தேசிய உற்பத்தி, 2024ஆம் ஆண்டில் வளர்ச்சிப் போக்கைக் காண்பித்துள்ளது.

இது எதிர்காலம் குறித்த நம்பிக்கையான எதிர்பார்ப்புகளுக்கு வழிவகுத்துள்ளதாக தொகைமதிப்பு புள்ளிவிவரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தில் ஏற்பட்ட இந்த ஆரோக்கியமான மாற்றங்களுக்கு மத்தியில், பணவீக்கத்தில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி, சிறந்த பொருளாதாரம் குறித்த எதிர்பார்ப்புகளுக்கு உத்வேகம் தந்துள்ளது. அதே நேரத்தில் உற்பத்தியாளர்கள் தங்கள் விலைகளைக் குறைத்து, உள்ளீட்டுச் செலவுகளைக் குறைத்தமையும் கவனிக்கத்தக்கது.

எது, எப்படியாயினும் 2022 இல் நாடு எதிர்கொண்ட மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து இந்த மீட்சி என்பது குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். நாடு சற்று தன்னை ஆசுவாசப்படுத்தி, பொருளாதார நெருக்குவாரத்தில் இருந்து மீண்டு எழுவதற்கான ஒரு சூழலை இந்தப் பொருளாதார விருத்திநிலை தந்திருக்கின்றது என்பதும் மறுக்க முடியாத உண்மை.

அதலபாதாளத்தில் விழுந்த நாட்டின் பொருளாதாரத்தை தூக்கி நிறுத்தி, மீண்டும் ஸ்திரமாக்கலாம் என்ற நம்பிக்கையை இப்போதைய பொருளாதார விருத்திப் போக்கு தந்திருப்பதும் மறப்பதற்கு இல்லை.

இத்தகைய பொருளாதார விருத்திக்கான அடிப்படையை - சூழலை - நம்பிக்கையை - ஏற்படுத்தியது ரணில் விக்கிரமசிங்கவின் கடந்த கால தலைமை என்பதை நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.

அடுத்த வேளையை - அடுத்த நாளை - எப்படி எதிர்கொள்வது என்று தெரியாமல் நாடு தத்தளித்துத் தடுமாறிக் கொண்டிருந்த நெருக்கடி சமயத்தில் நாட்டின் தலைமைத்துவத்தை பொறுப்பேற்று, கசப்பான பொருளாதார முடிவுகளை மக்கள் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் எடுத்து, நடைமுறைப்படுத்தி, நாடு மீண்டெழுவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்திக் கொடுத்தது ரணில் விக்கிரமசிங்கவின் அந்தப் பொருளாதார வழிகாட்டல் தலைமை என்பதை இலங்கை நாடு நன்றியோடு நினைவு கூர வேண்டிய கட்டம் இது.

இப்போதைய அரசு பொருளாதாரத் திட்டங்கள் குறித்து - எதிர்காலம் குறித்து - போக்குகள் குறித்து - அதிகப்பிரசங்கித்தனமான என்ன அறிவித்தல்களை விடுத்தாலும், அவையெல்லாம் ரணில் விக்கிரமசிங்க போட்ட அத்திவாரத்திலிருந்தே கட்டி எழுப்பப்பட வேண்டும் என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.



# சம்மாந்துறை இருட்டு வட்டம் அமைப்பால் உலர் உணவு பொருள்கள் வழங்கி வைப்பு!

(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பிரதேசத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் தெரிவுசெய்யப்பட்ட சுமார் 150 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை இருட்டு வட்டம் அமைப்பின் தலைவர் சட்டமுதுமானி எம்.ஏ.எம்.லாபீர் தலைமையில் சம்மாந் துறையில் பல்வேறு பகுதிகளில் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. இந்த அமைப்பானது கடந்த 10 வருடங்களுக்கு மேலாகச் சமூக சேவைகள் மற்றும் பல்வேறு உதவித் திட்டங்களைச் செய்து வருகின்றது.

இதன் போது அமைப்பின் உறுப்பினர்கள் கருத்து தெரிவிக்கையில், எங்கள் அமைப்பானது எவ்வித அரசியல் எண்ணங்களும் இல்லாமல் ஓர் சமூக சேவையை நோக்காகக் கொண்டு செயற்படுகிறது.

அமைப்பின் விசேட அம்சமாக உலர் உணவுப் பொருள் கள் வழங்கும் போது புகைப்படம் எடுக்கப்பட்ட மாட்டாது. அனைத்து உலர் உணவுப் பொருள்களும் அமைப்பு உறுப்பினர்களின் சொந்த நிதியில் இருந்து வழங்கப்படுகிறது என்று தெரிவித்தார்.





# மூதூர் சிவில் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் சமூக நல்லிணக்க இப்தார் நிகழ்வுகள்!

(ஹஸ்பர் ஏ.எச்., எஸ். கீதபொன்கலன்)

மூதூர் பிரதேச செயலக எல்லைக்கு உட்பட்ட அனைத்து பிரதேசங்களையும், சமூகங்களையும் ஒருங்கிணைத்து உருவாக்கப்பட்ட 'மூதூர் சிவில் ஒன் றியத்தின்' ஏற்பாட்டில் இப்தார் நிகழ்வு மூதூர்-பேர்ல் கிராண்ட் வரவேற்பு மண் டபத்தில் நடைபெற்றது.

மூதூர் பிரதேசவாழ் பல்லின சமூகங் களிடையே புரிந்துணர்வையும், நல்லிணக்கத்தையும் மேம்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில், சர்வமதத் தலைவர்கள், திணைக்கள அதிகாரிகள்,பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள், சிவில் சமூக அமைப்பின் பிரதிநிதிகள், மகளிர் சங்கங்களின் பிரதிநிதிகள், விளையாட்டு சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் மூதூர் சிவில் ஒன்றிய உறுப் பினர்கள் உள்ளிட்ட 140 இற்கும் மேற் பட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் மூதூர் சிவில் ஒன்றியம் தொடர்பாக கலந்து கொண்டோருக்கு குறுகிய அறிமுகம் வழங்கப்பட்டது. இந்நிகழ்வின் முக்கியத்துவம் தொடர்பில் சர்வமதத் தலைவர்களின் உரையும் இடம்பெற் றது.

குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998







# மீட்பு நடவடிக்கையும் உயிர் காத்தலும் கற்கையும் பயிற்சியும் சம்மாந்துறையில்!

**(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)**


மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காத்தல் தொடர்பான பயிற்சி நெறி சம்மாந்துறையில் இடம்பெற்றது.

அல் உஸ்வா இஸ்லாமிக் அமைப்பின் தலைவரும் அல் உஸ்வா மகளிர் அரபுக் கல்லூரியின் அதிபருமான மௌலவி ஐ.எல்.எம். முஸ்தபா தலைமையில் சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

மீட்பு நடவடிக்கை மற்றும் உயிர் காற்றல் தொடர்பான பயிற்சி நெறியைத் தெளிவூட்டுவதற்காக வளவாளராக அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் எம்.ஏ.சி.எம். றியாஸ், வெள்ள பெருக்கு ஏற்படும் இடங்கள், அம்பாறை சேனநாயக்கா சமுத்திரத்தின் முக்கியத்துவம், வெள்ள நிலைமைகளின் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் போன்ற விடயங்கள் தொடர்பான விளக்கம் அளித்தார்.




Muhurtham
Jewels
Our Strategy Is To Provide
Our Customers
With Quality Products
more details CLICK
Bridal Set NEK 106 / 375
Harams
Haram NEK 318
Harams
Haram NEK 473
Harams
Haram NEK 477
Harams
Necklaces
Chains
Harams
Pendants
2900 Markham Rd Unit A30,
Toronto, ON M1X 1E6,
Canada
www.muhurthamjewels.ca
Jewelsmuhurtham
Muhurtham Jewels
(416) 321-7555



# மட்டக்களப்பு பட்டிப்பளையில் போதைவஸ்து விழிப்புணர்வு!

(பழுவூரான்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துவரும் சட்ட விரோத போதைவஸ்து பாவனை மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்தும் வகையில் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலில் சுகாதாரத் திணைக்களம் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை தற்பொழுது மேற்கொண்டு வருகிறது.

இதற்கமைய மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் எஸ். முரளிதரனின் வழிகாட்டுதலில் மட்டக்களப்பு பட்டிப்பளை வைத்திய அதிகாரி பிரிவில் போதைவஸ்து தடுப்பு பற்றிய விழிப்புணர்வு ஊர்வலமொன்று நடைபெற்றது.

பட்டிப்பளை சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் கே. ரமேஷ் தலைமையில் நடைபெற்ற இந்த போதைவஸ்து தடுப்ப விழிப்புணர்வு ஊர்வலம் அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயாத்திலிருந்து ஆரம்பமாகி, பிரதான வீதி வழியாகப் பயணித்து கொக்கட்டிச்சோலை சந்தியில் நிறைவு பெற்றது.

இவ்விழிப்புணர்வுப் பேரணியில் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், தாதி யர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள், மருத்துவ மாதுக்கள், வைத்தியர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதில் கலந்து கொண்டவர்கள் "போதைவஸ்து ஒழிக்கப்பட வேண்டும்", "போதைவஸ்திலிருந்து எம் இளம் சந்ததியைக் காப்பாற்றுங்கள்", "சமூக ஆள்கொல்லி நோய் போதைவஸ்தினைத் தடுப்பதற்கு சகலரும் முன்வர வேண்டும்" போன்ற கோரிக்கைகள் அடங்கிய பதாகைகளைத் தங்கிய வாறும் கோஷமிட்டவாறும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

இதன்போது போதைவஸ்தின் தாக்கத்தால் ஏற்படும் விளைவுகளை வெளிக்கொணரும் வகையிலான வீதி நாடகமொன்று பாடசாலை மாணவர்களால் அரங்கேற்றப்பட்டது.









# கண்டியில் விருது பெற்ற காரைதீவு கிருபாஞ்சனா!

(வி.ரி. சகாதேவராஜா)

கண்டியில் இடம்பெற்ற முதல் 100 விருதுகள் வழங்கும் விழாவில் காரைதீவைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி கிருபாஞ்சனா கேதீஸ் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டுடனும் தினகரன் பத்திரிகையின் அனுசரணையுடனும் கண்டியில் இடம்பெற்ற முதல் 100 எனும் விருது வழங்கும் நிகழ்வில் அவர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டார்.

காரைதீவை சேர்ந்த திருமதி. கிருபாஞ்சனா கேதீஸ் கிழக்கு பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக, சிரேஷ்ட விரிவுரையாளராவார்.

அந்த நிகழ்ச்சியில் கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், இலக்கியவாதிகள், சமூக ஆர்வலர்கள் என 100 பிரபலங்கள் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வுக்கு மத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

தினகரன் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர் உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கெண்டனர்.




# கவிஞர் சூரியநிலாவின் ‘சீர்மியம்’ நூல் வெளியீடு

(த.சுபேசன்)

மேற்பார்வைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஜென்சன் றொனால்ட் (கவிஞர் சூரியநிலா) எழுதிய “சீர்மியம்” சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழா கொடிகாமத்தில் அமைந்துள்ள சாவகச்சேரி பிரதேச சபையின் தலைமைச் செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி துஷ்யந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக சமுதாய மருத்துவ நிபுணர் திருமகளும், சிறப்பு விருந்தினராக எழுத்தாளர் அஜந்தனும் கலந்துகொண்டனர்.

நூல்வெளியீட்டில் முதற்பிரதியை சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர் சந்திரகுமார் பெற்றுச் சிறப்பித்திருந்தார்.

சிறுவர்களதும் வளரிளம் பருவத்தினரதும் மன எழுச்சிகளைப் பெற்றோரும் சமூகமும் கையாள வேண்டிய உத்திகளை முன்னிறுத்தி சீர்மியம் நூலாசிரியர் ஆ.ஜென்சன் றொனால்டால் பதினைந்து சிறுகதைகள் இந்த நூலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

# ஐகோனிக் யூத்ஸ் அமைப்பினரால் ரம்ழான் உலர் உணவு வழங்கல்

(றிஸ்வான் சாலிஹூ)

2025 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டத்தின் மூலம் இவ்வருட ரம்ழான் மாதத்தில் அக்கரைப்பற்று பிராந்தியத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

செயற்றிட்டத்தின் முதற்கட்ட நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேசத்தில் அமைப்பின் ஸ்தாப தலைவர் முஹம்மட் தில்ஷானின் வழிகாட்டலில் தவிசாளர் சிமாம் முஸ்தாக் தலைமையில் இடம்பெற்றது.

இந்தச் செயற்றிட்டத்தின் ஊடாக சுமார் 50 குடும்பங்களுக்குப் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. அத்துடன் சில குடும்பங்களுக்கு அவசர நிதியுதவிகளும் இதன்போது வழங்கப்பட்டது. இவ்வமைப்பு இப்பிராந்தியத்தில் உள்ள மூவின மக்களுக்கும் அண்மைக் காலமாக பல தரப்பட்ட மனிதாபிமான உதவிகளை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.







# கோப்பாய் கந்தவேள் பாடசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு மணிவிழா

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் கோப்பாய் தெற்கு கந்தவேள் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஓய்வு பெற்ற சிரேஷ்ட ஆசிரியர் கணேசபிள்ளை உமாகரனின் மணிவிழா நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்தப் பாடசாலை அதிபர் உமாவதி ரவீகரன் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ். வலயக் கல்வி அலுவலக ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் பிரேமினி திருக்குமார், செயற்பட்டு மகிழ்வோம் ஆசிரிய ஆலோசகர் சிவகாந்தி, ஓய்வு பெற்ற அதிபர் சு.விவேகானந்தன், கோப்பாய் நாவலர் வித்தியாலய அதிபர் சிவரஞ்சினி, பாடசாலை நலன் விரும்பியும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினருமான ந.கஜேந்திரகுமார் மற்றும் அயல் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது பான்ட் வாத்திய சகிதம் விழா நாயகன் அழைத்துவரப்பட்டு மங்கல விளக்கேற்றல், இறைவணக்கம், வரவேற்புரை, வரவேற்பு நடனம், தலைமையுரை, வாழ்த்துரைகள், மாணவர்களின் கலைநிகழ்வுகள், விழாநாயகனும் பாரியாரும் கௌரவிப்பு நிகழ்வு, ஏற்புரை, நன்றியுரை என்பன நடைபெற்றன.







# இலங்கை கிரீடா சக்திக் கூடைப்பந்தாட்ட அணிக்கு திருக்குடும்பக் கன்னியர் மடம்!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை கிரீடா சக்தி கூடைப்பந்தாட்ட அணிக்கு யாழ். திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையைச் சேர்ந்த 4 மாணவிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு புளூஸ் கூடைப்பந்தாட்ட திடலில் இதற்கான தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் யாழ். திருக் குடும்ப கன்னியர் மட அணியைச் சேர்ந்த சகானா விஜருபன், எஸ்தார் ஜாக்சன், டிலான் காசில்டா, ஆர். லோட்சி ஆகிய 4 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

# கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஏற்பாட்டில் உலர் உணவு பொதிகள்



(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை ரஹ்மத் பவுண்டேசனால் பொது மக்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த நிகழ்வு கல்முனை மாநகரசபை முன்னாள் பிரதி முதல்வரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொருளாளரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் பவுண்டேசனின் கல்முனை அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த வாழ்வாதார உலர் உணவு பொதிகளை வழங்க சீ.எஸ். டப்ளியூ. எம்.ஏ. மற்றும் வை.எம்.எம்.ஏ. என்பன அனுசரணை வழங்கின. ஒரு தொகை பேரீச்சம் பழங்களை அல்ஹிக்மா நலன்புரி அமைப்பினரும் வழங்கியிருந்தனர்.

இதன்போது பொது மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் கல்முனை ரஹ்மத் பவுண்டேசனின் ஸ்தாபக தலைவர் ரஹ்மத் மன்சூர் பொது மக்களுக்கு வழங்கி வைத்தத்துடன் அத்துடன் அங்கு இடம் பெற்ற நிகழ்வில் உலர் உணவுப் பொருள்கள் மற்றும் உதவி செய்த அனைவருக்கும் தனது நன்றியை ரஹ்மத் மன்சூர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வுக்கு கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.எம். நிஷார், கல்முனை சமூக சேவை உத்தியோகத்தர் எம்.ஜெய்ஷான் மற்றும் உலமாக்கள், பவுண்டேசனின் உறுப்பினர்கள் பயனாளிகள், நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.






# மட்டக்களப்பில் திருவள்ளுவர் குருபூசை!

(பழுவூரான்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஆலோசனை, வழிகாட்டலுக்கு அமைவாக சிவதொண்டர் திருக்கூட்டத்தின் ஏற்பாட்டில் மகா நரசிங்க வைரவர் சுவாமி அறநெறிப் பாடசாலை, மகா நரசிங்க வைரவர் ஆலயம், நடராஜர் சைவசித்தாந்தப் பயிற்சி மையம் மற்றும் உலக சிவனடியார்கள் திருக்கூட்டம் ஆகிய அமைப்புக்கள் இணைந்து திருவள்ளுவர் குருபூசை விழாவை நடத்தின.

இதன்போது சமய வினாவிடைப் போட்டியும், சிவசின்னங்கள் அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மகா நரசிங்க வைரவர் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் மட்டக்களப்பு ஸ்ரீ மகா நரசிங்க வைரவர் சுவாமி ஆலயத் தலைவர் துரைராசா ஜோதீஸ்வரன் தலைமையில் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட இந்துக் கலாசார உத்தியோகத்தர் எஸ்.குணநாயகம், மட்டக்களப்பு மாவட்ட இந்துக் கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான திருமதி க.கயல்விழி, திருமதி து.சர்மிளா, பாரதிபுரம் கிராமசேவை உத்தியோகத்தர் திருமதி த.தர்சினி மற்றும் பாரதிபுரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி வா.புஸ்பராணி ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், யுனைட்டட் புத்தகசாலை உரிமையாளர் பா.செல்வராசா, முன்னாள் இந்து மன்றத் தலைவி திருமதி த.சக்திராணி மற்றும் இந்து மகளிர் மன்ற ஆலோசகர் திருமதி தெ.ராமாசி, தொழிலதிபர் சிவபாதசுந்தரம் ஆகியோர் விஷேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது சிவதொண்டர்களால் குருபூசை நிகழ்த்தப்பட்டது. குருபூசை நிறைவு பெற்றதைத் தொடர்ந்து வரவேற்பு நடனம், தலைமையுரை, கலை நிகழ்வுகள் இடம்பெற்றன.





# யானைகளால் சிறைப்பிடிக்கப்பட்டவரை மீட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தினர்

(பாறுக் ஷிஹான்)

வயல் வெளியில் காவலுக்கு நின்றவர் காட்டு யானைகளின் ஆக்கிரமிப்பால் சிறைப்பிடிக்கப்பட்ட நிலையில் அங்கு வந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளால் மீட்கப்பட்ட சம்பவம் அம்பாறை மாவட்டம் காரைதீவு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப்பள்ளி பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை (18) இடம்பெற்றது.

சுமார் 50 இற்கும் அதிகமான யானைகள் வயல் அறுவடையின் பின்னர் மேற்குறிப்பிட்ட மாவடிப்பள்ளி பகுதியில் உட்புகுந்து அங்கு புதிதாக முளைத்துள்ள புற்களை உண்டு வருகின்றன. சட்டவிரோதமாகக் கொட்டப்படும் குப்பைக் கூளங்களையும் நாடி வயல் வெளிகளில் நடமாடிக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் சம்பவ தினம் மாலை அறுவடை செய்யப்பட்ட வயல்வெளியில் மாடுகளை மேய்ப்பதற்காக காவலுக்குச் சென்ற நபரை திடீரென அங்கு சென்ற யானை கள் சுற்றி வளைத்ததுடன் குறித்த நபரைத் தாக்க



முயன்றுள்ளன.

உடனடியாக செயற்பட்ட அந்த நபர் அருகில் உள்ள உயரமான இடமொன்றில் ஏறியுள்ளார். எனினும் குறித்த நபரை விடாது துரத்திய யானைகள் தாக்கும் முயற்சியில் ஈடுபட்டன. இதேவேளை தகவலை அறிந்த வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு உடனடியாக வந்து வெடி பொருள்களைப் பாவித்து யானைக் கூட்டத்தைப் பின்வாங்க செய்ததுடன் யானை தாக்குதல் ஆபத்தில் இருந்த நபரையும் மீட்டுள்ளனர்.

இப்பகுதிக்குச் சுமார் 200 இற்கும் அதிகமான யானைகள் பட்டி பட்டியாக வருகை தருவதுடன் பொது மக்களின் உடமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றன. அண்மைக் காலமாக இந்தப் பிரதேசத்தில் கூட்டமாக ஊடுருவும் யானைகள் காய்க்கும் தென்னை மரங்கள் உட்பட பயன் தரும் மரங்கள் வீட்டுத் தோட்டங்கள், குடியிருப்புகள், வேலிகள் என்பவற்றை துவம்சம் செய்து வருகிறது. பல லட்சம் ரூபா பெறுமதியான சொத்தழிவுகளை ஏற்படுத்தி வருகின்றன. நூற்றுக்கணக்கான காய்க்கும் தென்னை மரங்கள் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் யானை, மனித மோதலைக் கட்டுப்படுத்திச் சொத்தழிவு, உயிரிழப்புக்களை தவிர்க்கும் நோக்கில் இதற்கான நிரந்தர தீர்வு ஒன்றை பெற்று தருமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

இதேவேளை அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருது கமநல சேவைகள் மத்திய நிலையத்தின் கீழ் உள்ள குடாக்கள்ளி மேற்கு கண்டத்தில் அறுவடைக்கு தயாராகஇருந்தசுமார்15ஏக்கர்வேளாண்மைகளை காட்டு யானைகள் நாசமாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்பு!

## நாடாளுமன்ற வளாகத்தில் எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்




மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுவரையறை மேற்கொள்ள எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க, காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பிக்கள் நாடாளுமன்ற வளாகத்தில் இன்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில், தி.மு.க. எம்.பிக்கள் கனிமொழி, திருச்சி சிவா, தயாநிதி மாறன், கனிமொழி என்.வி.என். சோமு, பி. வில்சன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி எம்.பி. தொல் திருமாவளவன், காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். வஞ்சிக்காதே வஞ்சிக்காதே தென் மாநிலங்களை வஞ்சிக்காதே என்றும், மக்கள் தொகை அடிப்படையில் தொகுதிகளைக் குறைக்காதே என்றும் அவர்கள் கோஷங்களை எழுப்பினர்.

இதனிடையே, இந்த விவகாரம் தொடர்பாக காங்கிரஸ் எம்.பி ஜோதிமணி மக்களவையில் விதி எண் 377-ன் கீழ் தனது கருத்தைப் பதிவு செய்தார். அவர் தனது உரையில்,

"நாடாளுமன்ற தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இந்த நடவடிக்கை தமிழகத்தை போன்ற தென் மாநிலங்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை வெகுவாகக் குறைக்கும் அபாயத்தை உருவாக்குகிறது.

கடந்த பல பத்தாண்டுகளாக தமிழகமும் மற்ற தென் மாநிலங்களும் பொறுப்பு மற்றும் தொலைநோக்குடன் செயல்பட்டு, மக்கள் தொகைக் கட்டுப்பாட்டை செயல்படுத்தி வந்துள்ளன. இது ஒன்றிய அரசே ஊக்குவித்த ஒரு நடவடிக்கையாகும். ஆனால் இன்று, இந்த வெற்றிக்காக நாங்கள் தண்டிக்கப்படுகிறோம்.

ஒன்றிய உள்துறை அமைச்சர் தென் மாநிலங்களின் தொகுதிகள் குறையாது எனக் கூறுகிறார். ஆனால், மக்கள்தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு செயல்படுத்தப்பட்டால், மக்கள் தொகையை கட்டுப்படுத்தத் தவறிய மாநிலங்கள் அதிக அரசியல் அதிகாரத்தைப் பெறும். இதனால், தமிழகத்தை போன்ற மாநிலங்களின் ஜனநாயக உரிமைகள், அதிகாரம் பறிக்கப்படும். இதன் விளைவாக, தமிழகம் மட்டுமல்ல, தென் இந்தியாவின் ஒட்டுமொத்த குரலும் வலுவிழந்துவிடும்.

எமது மாநிலங்களின் பங்களிப்பு பொருளாதாரம், சமூகம், பண்பாடு உள்ளிட்ட அனைத்து தளங்களிலும் மிகப்பெரியது என்றாலும், தேசிய அளவில் முடிவெடுக்கும் இடங்களில் எங்களுக்குரிய பிரதிநிதித்துவம் குறைக்கப்படும். இதைப் பார்த்துக் கொண்டு தென் மாநிலங்கள் அமைதியாக இருக்க முடியாது. எங்கள் பிரதிநிதித்துவத்தை குறைக்கும் எந்த முயற்சியையும் நாங்கள் ஏற்க மாட்டோம்.

எனவே, ஒன்றிய அரசு உடனடியாக தகுந்த விளக்கம் அளித்து, தொகுதி மறுசீரமைப்பு எந்த அடிப்படையில் நடக்கிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். தமிழகம் மற்றும் தென் மாநிலங்கள் இரண்டாம்தர அரசியல் அமைப்பிற்கு தள்ளப்படாது என்று உறுதியளிக்க வேண்டும்." என்று கோரிக்கை விடுத்தார்.




# போராட்டத்தில் ஈடுபடும் அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கிடையாது; தமிழக அரசு எச்சரிக்கை

பணிக்கு வருகை தராமல் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் ஊழியர்களுக்கு சம்பளம் கிடையாது என தமிழக அரசு எச்சரித்துள்ளது.

அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் இன்று ஒருநாள் வேலை நிறுத்த போராட்டம் அறிவித்துள்ள நிலையிலேயே தமிழக அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

அத்துடன் மருத்துவ விடுப்பைத் தவிர சாதாரண விடுப்போ, ஏனைய விடுப்போ அரசு ஊழியர்கள் எடுக்கக் கூடாது என்றும், காலை 10.15 மணிக்குள் பணிக்கு வராத ஊழியர்களின் விவரங்களை சேகரிக்குமாறும் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.





# 9 மாதங்களுக்குப் பிறகு பாதுகாப்பாக பூமி திரும்பினார் சுனிதா வில்லியம்ஸ்

இந்திய வம்சாவளி விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அமெரிக்க விண்வெளி வீரர் பேரி வில்மோர் உள்ளிட்டோர் ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண் கலம் மூலம் பத்திரமாக பூமிக்கு திரும்பினர்.

இந்திய நேரப்படி இன்று புதன் கிழமை அதிகாலை 3.27 மணிக்கு புளோரிடா கடலில் டிராகன் ஸ்பிளாஷ் டவுன் ஆனது. சுனிதா மற்றும் வில் மோருடன் அமெரிக்கா மற்றும் ரஷ் யாவைச் சேர்ந்த விண்வெளி வீரர்கள் இருவரும் டிராகன் விண்கலம் மூலம் பூமி திரும்பினர். உலகம் முழுவதும் உள்ள மக்கள் பலரும் இவர்கள் பாது காப்பாக பூமிக்கு திரும்ப வேண்டும் என பிரார்த்தனை செய்த வண்ணம் இருந்தனர். ஸ்பிளாஷ் டவுன் ஆகும் காட்சியை நாசா, ஸ்பேக்ஸ் எக்ஸ் நிறுவனங்கள் நேரடி ஒளிபரப்பு செய்து வந்தன.

முன்னதாக, அமெரிக்காவின் போயிங் நிறுவனம் தயாரித்த ஸ்டார் லைனர் என்ற புதிய விண்கலத்தில் இந்திய வம்சாவளியை சேர்ந்த அமெ ரிக்க விண்வெளி வீராங்கனை சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் கடந்த ஆண்டு ஜூன் 5 ஆம் திகதி ஐ.எஸ். எஸ். நிலையத்துக்கு சென்றனர்.

இவர்கள் 8 நாள்கள் ஆய்வு செய்து விட்டு பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டு இருந்தது. ஆனால் ஸ்டார்லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது. கடந்த ஆண்டு செப்டெம்பர் 7 ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலம் ஆள்கள் இன்றி பூமிக்கு திரும்பியது. இதைத் தொடர்ந்து கடந்த செப்டெம்பர் 28 ஆம் திகதி ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத் தின் டிராகன் விண்கலம் அமெரிக்கா வின் நிக் ஹேக், ரஷ்யாவின் அலெக் சாண்டர் ஆகிய இரு வீரர்களுடன் ஐ.எஸ்.எஸ். நிலையம் சென்றது.

கடந்த 16 ஆம் திகதி அமெரிக் காவை சேர்ந்த ஆனி மெக்லைன், நிகோல் அயர்ஸ், ஜப்பானை சேர்ந்த டகுயா ஒனிஷி, ரஷ்யாவை சேர்ந்த கிரிஸ் பெஸ்கோஸ் ஆகியோர் டிரா கன் விண்கலத்தில் ஐ.எஸ்.எஸ். நிலையம் சென்றனர். சர்வதேச விண் வெளி நிலையத்தில் 7 வீரர்கள் தங் கியிருந்து ஆய்வு செய்தனர். புதிய வீரர்கள் ஐ.எஸ்.எஸ். நிலையம் வந்த பிறகு அவர்களிடம் பணிகளை ஒப் படைத்துவிட்டு பழைய வீரர்கள் பூமிக்கு திரும்புவது வழக்கம். இதற்கு 5 நாள்கள் வரை ஆகும். ஆனால் இந்த முறை 2 நாள்களிலேயே பழைய விண்வெளி வீரர்கள் நேற்று பூமிக்கு புறப்பட்டனர்.

இதன்படி அமெரிக்காவை சேர்ந்த நிக் ஹேக், சுனிதா வில்லியம்ஸ், பேரி வில்மோர் மற்றும் ரஷ்யாவை சேர்ந்த அலெக்சாண்டர் ஆகியோர் டிராகன் 9 விண்கலத்தில் இந்திய நேரப்படி நேற்று காலை 10.35 மணிக்கு பூமிக்கு புறப்பட்டனர். சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து 17 மணி நேர பயணத்துக்குப் பிறகு இன்று அதிகாலை 3.27 மணி அளவில் அமெரிக்காவின் புளாரிடா கடல் பகுதியில் டிராகன் விண்கலம் வந்து சேர்ந்தது.

இதுகுறித்து நாசா வட்டாரங்கள் குறிப்பிடுகையில்,

"சுனிதா வில்லியம்ஸும், பேரி வில்மோரும் விண்வெளியில் 9 மாதங்கள் 13 நாள்கள் தங்கியிருந்தனர். அவர்கள் உட்பட 4 வீரர்களுக்கும் பல்வேறு உடல்நலக்குறைவுகள் ஏற்படும். குறிப்பாக அவர்களின் எலும்புகள், தசைநார்கள் பலவீனம் அடைந்திருக்கும். அவர்களால் எழுந்து நடக்க முடியாது. 4 பேரும் மறுவாழ்வு மையத்துக்கு அழைத்துச் செல்லப்படு வார்கள். அங்கு 6 வாரங்கள் தீவிர பயிற்சி அளிக்கப்படும்.

குறிப்பாக தரையில் கால் ஊன்றி நடப்பதற்கு பயிற்சி வழங்கப்படும். ஊட்டச்சத்துள்ள உணவு வகைகள் வழங்கப்படும். அவர்கள் இயல்பு நிலைக்குத் திரும்பிய பிறகு வீடுக ளுக்கு செல்வார்கள்." இவ்வாறு நாசா வட்டாரங்கள் தெரிவித்தன.



# சுனிதா வில்லியம்ஸை வரவேற்ற டொல்பின்கள்!

சர்வதேச விண்வெளி நிலையத் தில் 9 மாதங்களாகச் சிக்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் இன்று அதிகாலை பூமிக் குத் திரும்பினர். இலங்கை நேரப்படி அதிகாலை 03.27 மணியளவில் புளோரிடா கட லில் அவர்கள் இறங் கியதாகத் தெரி விக்கப்படுகிறது.

இதன்போது கடலில் அவர்களின் விண்கல தரையிறங்கிய போது 'ட்ராகன்' விண்கல கேப்சூலைச் சுற்றி டொல்பின்கள் வட்டமடித்தன.

பூமிக்குத் திரும்பிய சுனிதா வில்லியம்ஸிற்கு டொல பின்கள் வரவேற்பளித்த காட்சி சமூக வலைத் தளங்களில் வைரலாகியுள்ளது.

கனடா முரசு
புதன்கிழமை 19/03/2025

### கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு முட்டை கடத்தல்கள் அதிகரிப்பு

கனடாவிலிருந்து அமெரிக்காவுக்கு முட்டை கடத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அமெரிக்காவில் முட்டை விலை வரலாறு 02▶





# மன்னர் சார்ளஸ் - மார்க் கார்னி சந்திப்பு: பக்கிங்ஹாம் அரண்மனை பேச்சுவார்த்தை

**பிரித்தானிய மன்னர் மூன்றாம் சார்லஸை பக்கிங்ஹாம் அரண்மனை யில் கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.**

**கனடாவின் மன்னராகவும் இருக்கும் மூன்றாம் சார்லஸ் மன்னர், மார்க் கார்னியை பக்கிங்ஹாம் அரண்மனையில் வரவேற்றார்.**

கனடா பிரதிநிதியின் தொடர்ச்சியான இராஜதந்திர சந்திப்புகளுக்கு மத்தியில் இந்த சந்திப்பு நிகழ்ந்துள்ளது.

முன்னதாக மார்க் கார்னி, பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனுடன் பிரான்சில் பேச்சுவார்த்தைகளில் பங்கேற்றார்.

பின்னர், அவர் 10 டவுனிங் தெருவில் இங்கிலாந்து பிரதமர் கெய்ர் ஸ்டார்மரை சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது.

கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாநிலமாக மாற்ற வேண்டும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சமீபத்தில் தெரிவித்த கருத்துக்கள், ஏற்கனவே இருக்கும் பதட்டங்களுக்கு பங்களித்துள்ளன.

இந்த இராஜதந்திர நடவடிக்கைகள், ஒட்டாவா மற்றும் வொஷிங்டன் டி.சி.க்கு இடையிலான சற்று பதட்டமான உறவுகளின் பின்னணியில் நடைபெறுகின்றன.



# ஒன்டாரியோவில் எரிபொருளுக்கான வரி குறைப்பை நிரந்தரமாக்கும் அரசாங்கம்

கனடா மத்திய அரசு நுகர்வோர் மீதான கார்பன் வரியை ரத்து செய்யும் முடிவு எடுத்திருந்தாலும், ஒன்டாரியோ மாநில அரசு எரிபொருள் வரி குறைப்பை நிரந்தரமாக்கும் திட்டத்தில் எந்த மாற்றமும் செய்யாது என மாகாண முதல்வர் டக் ஃபோர்ட் அலுவலகம் உறுதி செய்துள்ளது.

2022-ஆம் ஆண்டு ஜூலையில் முதன்முறையாக அறிமுகப்படுத்தப்பட்ட லீற்றர் 5.7 சதங்கள் குறைப்பு, தொடர்ந்து நீட்டிக்கப்பட்டு வருகிறது.

இதன் மூலம் ஒன்டாரியோவில் எரிபொருள் வரி லீற்றருக்கு 14.7 சதங்கள் குறைக்கப்பட்டது.

இப்போது, இந்தக் குறைப்பை நிரந்தரமாக்கும் முடிவை ஃபோர்ட் அரசு உறுதிப்படுத்தியுள்ளது.


கடந்த வாரம் பிரதமர் மார்க் கார்னி நுகர்வோர் கார்பன் வரியை நீக்குவதாக அறிவித்தார்.

இதன் மூலம், ஏப்ரல் 1 முதல் எரிபொருள் விலைகள் லீற்றர் ஒன்றுக்கு 19.9 சதங்கள் வரை குறையலாம் எனத் திருத்தி மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

டக் ஃபோர்ட், கார்பன் வரிக்கு கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியவராக இருந்து வருகிறார்.

எனவே, ஒன்டாரியோவின் எரிபொருள் வரி குறைப்பு நிரந்தரமாகும், மேலும் கார்பன் வரி நீக்கமும் எரிபொருள் விலைகளை மேலும் குறைக்கும் வாய்ப்பிருக்கிறது.






# கனடாவின் மொத்த பணவீக்கம் பெப்ரவரியில் 2.6 வீதமாக அதிகரிப்பு

கனடாவின் மொத்த பணவீக்கம் பெப்ரவரி மாதத்தில் 2.6 வீதமாக அதிகரித்துள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தற்காலிக வரி விடுவிப்பு முடிவுக்கு வந்ததால் கனடா அரசின் வரி தளர்வு ஜனவரி மாதம் முழுவதும் நடைமுறையில் இருந்ததால், நுகர்வோர் சில பொருள்கள், உணவக கட்டணங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள் மீது ஜிஎஸ்டி (GST) மற்றும் எச்டிஎஸ்டி (HST) வரிச் சலுகை பெற்றனர்.

இருப்பினும், பெப்ரவரி 15 ஆம் திகதி இந்த வரி தளர்வு முடிவுக்கு வந்ததால், பணவீக்கம் மீண்டும் உயர் நிலையில் எட்டியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வுகூறப்பட்டதனை விடவும் பணவீக்கம் அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்தோடு, எதிர்வுகூறப்பட்டதனை விடவும் கூடுதல் அளவில் பணவீக்கம் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. உணவக உணவின் விலைகள் 1.4 வீதம் வீழ்ச்சி கண்டன ஆனால், வரி மீண்டும் அறிமுகமாகியதும் விலை அதிகரித்தது.

மது பானங்கள், குழந்தைகள் உடைகள் மற்றும் பொம்மைகளின் விலையும் ஜனவரியைவிட குறைவாக இருந்தாலும், பெப்ரவரியில் சற்று உயர்ந்தன.

இந்தநிலையில், ஏப்ரல் முதலாம் திகதி கனடா அரசு நுகர்வோருக்கான கார்பன் வரியை நீக்க உள்ளதால், இது பணவீக்கத்தை கட்டுப்படுத்த உதவலாம்எனதெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், கனடா மற்றும் அமெரிக்க வர்த்தக போர் மேலும் விலைகளை உயர்த்தவும் வாய்ப்பு உள்ளதாக பொருளியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.




## கனடாவி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
காணாத அளவுக்கு உயர்ந் துள்ளதால், மெக்சிகோ மற்றும் கனடாவிலிருந்து முட்டை கடத்தல் சம்பவங்கள் அதிகரித்துள்ளதாக வால் ஸ்ட்ரீட் ஜர்னல் தகவல் வெளி யிட்டுள்ளது.

உள்நாட்டில் முட்டை விலை உயர்வு காரணமாக, அமெரிக்க நுகர்வோர் வேறு வழியின்றி இந்த நடவடிக்கையில் இறங்குகின்றனர் என தகவல் வெளியாகியுள்ளது.

முறையான ஆய்வு செய்யப்படாத முட்டைகள் நோய்களைப் பரப்ப வாய்ப்புள்ளதால், அமெரிக்கா முட்டை இறக்குமதியில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

அமெரிக்க சுங்க மற்றும் எல்லை பாதுகாப்பு துறையின் (CBP) தரவுகளின் படி, இந்த ஆண்டு இதுவரை முட்டை பறிமுதல் சம்பவங்கள் நாடு முழுவதும் 36 வீதம் அதிகரித்துள்ளது என தெரிவித்துள்ளது.

டெக்சாஸ் எல்லையின் ஒரு பகுதியை கண்காணிக்கும் CBP இன் லாரேடோ அலுவலகம், முட்டை பறிமுதல் சம்பவங்கள் 54 வீதம் அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது.

அமெரிக்காவில் கடந்த மாதம் 12 உயர்தர முட்டைகளின் சராசரி விலை 5.9 டொலராக அதிகரித்துள்ளது.

இது, தொழிலாளர் துறையின் தரவுகளின்படி, கடந்த ஆண்டு இதே கால கட்டத்தில் 12 தரமான முட்டை களின் சராசரி விலை 3 டொலராக இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சில நகரங்களில், 12 முட்டைகளின் விலை 10 டொலராக தாண்டியுள்ளது. ஆனால் அதே நேரத்தில், மெக்சிகோவில் 12 முட்டைகளின் சராசரி விலை 2 டொலருக்கும் குறைவாகவே உள்ளது.

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய ஒருவர் கைது






ரொராண்டோவின் ப்ராட்வியூ அவென்யூ மற்றும் ஜெரார்ட் ஸ்ட்ரீட் ஈஸ்ட் பகுதிகளில் பல வீடுகளில் புகுந்து திருட்டுச் சம்பவங்களை மேற்கொண்டார் என சந்தேகிக்கப்படும் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

30 வயதுடைய ஈயன் டிக்சன் என்பவர், கொள்ளை, மிரட்டல், உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளுக்காக கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 4 ஆம் திகதி காலை 3 மணியளவில், முதல் சம்பவம் இடம் பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர், வீட்டின் பின்புற கதவை திறந்து உள்ளே புகுந்து, குடியிருந்த ஒருவரை கத்தியால் மிரட்டி தாக்கியுள்ளார் என கூறப்படுகிறது.

ஆனால், அவர் எந்த பொருளையும் கொள்ளையடிக்காமல் தப்பிச்சென்றுள்ளார். இந்த சந்தேகநபர் மேலும் மூன்று சம்பவங்களிலும் ஈடுபட்டுள்ளார் என விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

மேற்படி நபர் ஒரு வீட்டின் வெளியே இருந்த கண்காணிப்பு கேமராவை சேதப்படுத்தியுள்ளார். பிறகு இன்னொரு வீட்டின் கதவை உடைத்து நகைகள் கொள்ளையடித்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர் மற்றுமொரு வீட்டில் அச்சுறுத்தும் செய்தி கொண்ட ஒரு குறிப்பை எழுதி விட்டுச் சென்றுள்ளார் என கூறப்படுகிறது.



# திருமண நாளில் கணவனைக் கொல்ல கூலிப்படையை ஏற்பாடு செய்த பெண்

கனேடிய பெண்ணொருவர் தனது 18 ஆவது ஆண்டு திருமண நாளில் தன் கணவரைக் கொலை செய்ய கூலிப்படையை ஏற்பாடு செய்துள்ளார்.

அவருக்குத் தெரியாத விடயம் என்னவென்றால், கூலிப்படையைச் சேர்ந்தவர் என அவர் எண்ணிய நபர் மாறுவேடத்திலிருந்த ஒரு பொலிஸார்.

கனடாவின் ஆல்பர்ட்டா மாகாணத்திலுள்ள கால்கரி நகரைச் சேர்ந்தவர் ஆட்ரா (வயது 60) என்னும் பெண். அவரது கணவர் டான்.

2021 ஆம் ஆண்டு, டான் 500,000 டொலர்களுக்கு ஆயுள் காப்பீடு எடுத்திருந்தார். தான் மரணமடைந்தால் அந்தத் தொகை தன் மனைவியைச் சேரவேண்டும் என அவர் விருப்பம் தெரிவித்திருந்தார்.

இப்படி இருந்த திருமண உறவு, 2024 ஆம் ஆண்டில் தலைகீழாக மாறிப்போனது. எப்போதும் சண்டையும் சச்சரவுமாக வாழ்க்கை மாற, கணவனை காலி செய்ய முடிவு செய்தார் ஆட்ரா.

ஆட்ராவுக்கு, கூலிக்கு கொலை செய்யும் ஒருவரது தொடர்பு கிடைத்துள்ளது. தங்கள் 18 ஆவது ஆண்டு திருமண நாளில், சமூக ஊடகம் ஒன்றில் 'திருமணமாகி 18 ஆண்டுகள். நம்ப முடியவில்லை, திருமண ஆண்டு விழா வாழ்த்துக்கள் அன்பரே, நமது அழகான இரவு உணவுக்காக காத்திருக்கிறேன்' என்று குறிப்பிட்டிருந்தார் ஆட்ரா.

அதே நேரத்தில், கூலிப்படையைச் சேர்ந்த ஒருவருக்கு 5,000 டொலர்கள் கொடுத்து தன் கணவரை கொலை செய்யும்படி சொல்லிக்கொண்டிருந்தார் ஆட்ரா.

ஆனால், தான் தன் கணவரைக் கொலை செய்ய கூலி பொருத்திய ஆள் மாறுவேடத்திலிருக்கும் ஒரு பொலிஸார் என்பது ஆட்ராவுக்குத் தெரியாது.

கைகால்களை உடைத்தால் போதாது, அவர் மருத்துவமனையில் எல்லாம் இருக்கக்கூடாது, நிரந்தரமாக அவரை முடித்துவிடவேண்டும், அது ஒரு விபத்து போல இருக்கவேண்டும், எனக்கு பிரச்சினை எதுவும் வரக்கூடாது என்றெல்லாம் மாறுவேடத்திலிருக்கும் பொலிஸாரிடம் கூறியுள்ளார் ஆட்ரா.

மூன்று நாள்களுக்குப் பிறகு, பொலிஸார் ஆட்ராவைக் கைது செய்தார்கள். ஆட்ராவுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.